### மெட்ரோ ரெயில் நிலையங்களில் இயக்கப்பட்ட

# ஷேர் ஆட்டோ, டாக்சியில் 6 லட்சம் பேர் பயணம்

சென்னை, டிச.6–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பயணிகளின் வசதிக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில் கோயம்பேடு, திருமங்கலம், ஆலந்தூர் உள்பட 7 மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ, டாக்சி சேவைகள் 3 கி.மீ. தூரம் வரை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் இயக்கப்படுகிறது.

இந்தநிலையில் நவம்பர் மாதத்தில் மட்டும் 39 ஆயிரத்து 294 பயணிகள் ஷேர் ஆட்டோ மற்றும் டாக்சியையும், 25 ஆயிரத்து 520 பேர் மெட்ரோ வேன் சேவையையும் பயன்படுத்தி உள்ளனர். அதன்படி மொத்தமாக நவம்பர் மாதத்தில் 64 ஆயிரத்து 814 பேர் இந்த சேவையின் மூலம் பயன் அடைந்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 11–ந்தேதியில் இருந்து நடப்பு ஆண்டு நவம்பர் மாதம் 30–ந்தேதி வரை 6 லட்சத்து 53 ஆயிரத்து 229 பேர் இந்த ஷேர் ஆட்டோ, டாக்சி மற்றும் வேன் சேவை பயன்படுத்தி உள்ளனர்.

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.